முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1456

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.09.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சுகின்ற தர்மபலத்தை
வள்ளலாக உலகோர்க்கு வாரி அருளுகின்ற
2. அருளுகின்ற குருராஜனே அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07 ம் நாள், 24.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் அரங்கன் சக்தி இன்னும் உலகறிய
3. உலகறிய மாதர்மத்தை செய்து
உயிர்கொலை நீக்கி சன்மார்க்க நெறிவழி வாழ
பழக மக்களுக்கு தவமாக அருளுகின்ற
பிரம்மஞானி அரங்கன் உன் ஆற்றலை
4. ஆற்றலை உலகோர் அறிந்துகொண்டால் போதும்
உன் அவதாரத்தை உலகோர் ஏற்று வந்தால் போதும்
மாற்றம் உலகமெல்லாம் நடந்தேறும்
மகான் அரங்கன் கருணையாலே மக்களுக்கு ஞானியாகின்ற
5. ஆகின்ற பெரும்வாய்ப்பு கூடி அவரவரும் கலியுகத்தில் அரங்கன் தேடுகின்ற
ஞானிகளாகி இனிதே அற்புதத்தை ஞான ஆட்சிக்கு உண்டான
மாற்றங்களை இனிதே அரங்கன் ஆசியோடு
மண்ணுலகில் செய்து பெரும் பேறுகாண நேரும்
6. நேர்மைகொண்டு அரங்கன் தர்மம் காத்து
நிலவுலகில் சன்மார்க்க நெறிபிறழா
வருமுலகில் தொடர்ந்து உலகோர் வந்தால் போதும்
வையகத்தில் அரங்கனால் இந்த அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—